பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆடி 4 (19—7—72) புதன் | வெளியூர்: ஆடி 5 (20—7—72) வியாழன் [இதழ்: 30

அம்பத்தூரில் கண்சிகிச்சை முகாம்

மதுராந்தகம், ஜூலை 19—
"ஆகஸ்டு இரண்டாவது வாரத்தில் அம்பத்தூரில் கண் மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்படும்" என்று செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டர் என். கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

இந்த முகாமில் கிட்டத்தட்ட 1000 கண் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படும்.

டில்லி அரசின் முரண்பட்ட போக்கு

தமிழகத் தொழிலமைச்சர் செ. மாதவன் கண்டனம்

திட்டவட்டமான தொழிற் கொள்கையை வரையறுக்க வற்புறுத்தல்

சென்னை, ஜூலை 19—

ஒரு பக்கம் தொழில் வளத்தைப் பெருக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு இன்னொரு பக்கம் தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையிடும் டில்லி அரசின் போக்குக்கு எதிராகத் தொழிலமைச்சர் திரு. செ. மாதவன் கண்டனக் குரல் எழுப்பியுள்ளார்.

இந்த முரண்பட்ட கொள்கைகளைக் கைவிட்டுத் திட்டவட்டமான தொழிற் கொள்கையை வரையறுத்துக் கொள்ளுமாறு அவர் டில்லி அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னை—அண்ணா சாலையில் உள்ள லூகாஸ் நிறுவனத்தைச் சேர்ந்த தொழிற்சாலையில் மோட்டார் வண்டிகளுக்குப் பயன்படும் 'இக்னிசன்காயில்' என்ற உதிரி உறுப்பு பத்து இலட்சம் தயாரிக்கப்பட்டுள்ளதையொட்டி ஓர் விழா நடத்தப்பட்டது.

லூகாஸ் நிறுவனத் தலைவர் டி. எஸ். கிருஷ்ணா, இயக்குநர் ஆர். இரத்தினம், பொது நிர்வாகி என். எஸ். மூர்த்தி ஆகியோர் பேசினர்.

இந்த நிறுவனத்தின் தலைவர் டி. எஸ். கிருஷ்ணா, 'தொழிற்சாலைகளை விரிவுபடுத்த அனுமதி கேட்டும் மத்திய அரசிடமிருந்து இன்னும் அனுமதி வரவில்லை' என்று குறிப்பிட்டார்.

இவ்விழாவில் கலந்துகொண்ட அமைச்சர் செ. மாதவன் பேசியதாவது:—

"நாட்டில் தொழில் வளத்தைப் பெருக்கவேண்டும் என்று ஒரு பக்கம் பேசப்படுகிறது; இன்னொரு பக்கம் புதிய தொழிற்சாலைக்கான அனுமதியைக் கொடுப்பதிலும் -- தொழிற்சாலையை விரிவுபடுத்துவதிலும் -- அனுமதி வழங்குவதிலும் காலம் கடத்துகிறார்கள்.

சில தொழிற்சாலைகளை, 'நீங்கள் சிபாரிசு செய்யும் நபர்களுக்குக் கொடுக்க முடியாது' என்று மறுத்து விடுகிறார்கள்.

இப்படி இரண்டுவிதக் கொள்கைகளை மத்திய அரசு வைத்திருந்தால் தொழில் வளம் எப்படிப் பெருகும்? எனவே, மத்திய அரசு திட்டவட்டமான தொழில் கொள்கையை வரையறுத்துக் கொள்ளவேண்டும்.

தொழில் லைசென்சு வழங்குவதில் காலதாமதத்தைத் தவிர்க்கத்தான், தொழில் லைசென்சு வழங்கும் அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும்' என்று வற்புறுத்தி வருகிறோம்.

அந்நியச் செலாவணி தேவைப்படாத தொழிலுக்கு அனுமதி வழங்கும் அதிகாரத்தை மாநில அரசிடம் தருவதில் ஏன் மத்திய அரசு தயக்கம் காட்ட வேண்டும் என்பது புரியவில்லை; இந்தப் பிரச்சினைக்கு ஒரு பரிகாரம் கண்டாக வேண்டும்.

தமிழ்நாட்டில் தொழில் அமைதி குறித்து இங்கு பேசப்பட்டது; இங்கு ஒன்றிரண்டு இடங்களைத் தவிர, மற்ற பகுதிகளில் எல்லாம் தொழில் அமைதி முழு அளவில் இருக்கிறது. அப்படியிருந்தும், தமிழ்நாடு முழுவதும் தொழில் அமைதி இல்லை என்பதுபோல் சித்தரித்துக் காட்டுகிறார்கள்.

எங்களிடம் பேசும் மத்திய அமைச்சர்களும், 'தமிழ்நாட்டில் தொடர்ந்து தொழில் அமைதியின்மை நீடித்தால் மற்ற மாநிலங்களும் பாதிக்கும்; எனவே, இந்த நிலை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று உபதேசம் செய்கிறார்களே தவிர, எங்களுக்கு உதவ முன்வருவது இல்லை.

தொழில் அமைதிக்குப் பங்கம் விளைவிப்பவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுத்தால் அப்போதும் மத்திய அரசு திருப்தி கொள்வது இல்லை; இப்படிப்பட்ட சந்தர்ப்பவாதங்களுக்கு இடம் கொடுத்தால் எப்படித் தொழில் அமைதியைக்கட்டிக் காக்க முடியும்?

வன்முறைக்கு எதிராகக் குரல் கொடுத்த கட்சித் தலைவர் யார்?

எங்கள் தலைவரும்--தமிழக முதலமைச்சருமான கலைஞர் அவர்கள், 'வன்முறைகளில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டாலும் சரி—ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டாலும் சரி—கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என்று பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்.

"முதலமைச்சர் இப்படிக் கட்சி வேறுபாடின்றி வன்முறையை அடக்க முன்வந்ததை ஆதரிக்கிறோம்; அவரோடு நாங்களும் துணை நிற்போம்" என்று தமிழ்நாட்டிலுள்ள எந்தக் கட்சிகளாவது முன்வந்தனவா? எதிர்க்கட்சித் தலைவர்கள் இதுகுறித்து வாயைத் திறந்து பேசினார்களா இல்லையே!

இதற்கெல்லாம் காரணம் அவர்களுடைய குறிக்கோள் வேறு என்பதுதான்; அது என்ன என்பதை நான் சொல்ல விரும்பவில்லை; நாட்டு மக்களே அதனை அறிவார்கள்.

எனவே, வன்முறையை அனைவரும் சேர்ந்து ஒழிக்கவேண்டும்."

வாஷிங்டன், ஜூலை 19—
தனது எதிரிகள் என்று சீனா குறித்துள்ளபட்டியலில இந்தியா மூன்றாவது இடம் வகிக்கிறதாம்.

மரண தண்டனை செல்லுபடியாகுமா?

தலைமை நீதிமன்றத்தில் அப்பீல்

புதுடில்லி, ஜூலை 19—
"கொலைக் குற்றங்கட்கு மரண தண்டனை விதிக்கலாம் என்று இந்தியன் பினல் கோடு கூறுகிறது; இது சட்டப்படி செல்லுபடியாகாது"
என்று தலைமை நீதிமன்றத்தில் ஓர் அப்பீலில் வாதாடப்பட்டது.

ஒரு கொலைக் குற்றத்தில் அலகாபாத் உயர் நீதிமன்றம், எதிரிக்கு மரண தண்டனை விதித்திருந்தது; இதற்கு எதிராகத்தான் இந்த அப்பீல் வந்திருக்கிறது.

'மரண தண்டனை செல்லுபடியாகாது' என்று அண்மையில் அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் அளித்த ஒரு தீர்ப்பை எதிரியின் வழக்கறிஞர் ஆதாரம் காட்டினார்.

ஐந்து நீதிபதிகள் கொண்ட ஒரு பெஞ்சு அதை முடிவு செய்ய வேண்டுமென்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

232 இடங்களுக்கு 2,500 மனுக்கள்

சென்னை, ஜூலை 19—
கிண்டியிலுள்ள மாதிரித் தொழில் நிலையத்தில் சேருவதற்கு இந்த ஆண்டு மிக அதிகமான பேர் மனுச் செய்திருந்தனர்.

இந்த நிலையம் பயிற்சி அளிப்போருக்கான மத்தியத் தொழில் நுணுக்க நிலையத்துடன் இணைந்ததாகும்.

மேற்கண்ட நிலையத்தில் உள்ள 232 இடங்களுக்கு 2,500 பேர் மனுச் செய்திருந்ததாக நிலையத்தின முதல்வர் சி ஜி. மேனன் கூறினார்.

"இந்த நிலையத்தில் பயிற்சி பெற்றவர்களுக்குத் தொழிற்சாலைகளில் நல்ல கிராக்கி இருக்கிறது; இவர்களுக்கு வேலையிலலாத் திண்டாட்டம் என்பது இல்லை; பயிற்சி முடியும் கட்டத்திலேயே தொழிற்சாலைகள் இவர்களைச் சேர்த்துக் கொள்கின்றன; கிராக்கியின் காரணம் இதுதான்" என்று கல்லூரி முதல்வர் மேலும் விளக்கினார்.

25 பேர்களைப் பலி வாங்கிய அலிகார் நிகழ்ச்சி

நிலைமையைக் கண்டறியத் தி. மு. க.--முஸ்லிம் லீக் குழு

மனோகரன்--வில்லாளன்--அப்துஸ் சமது உ. பி.-க்கு நாளை புறப்பாடு

சென்னை ஜூலை 18—

"இந்திரா காங்கிரசு அரசோச்சும் உ. பி. மாநிலத்தில் அண்மையில் நடைபெற்ற கலவரத்தையும் -- அதையொட்டி நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டையும் — அதனால் 25 பேர் கொல்லப்பட்டதையும் பற்றி நேரில் விசாரித்தறியத் தமிழகத்திலிருந்து நாடாளுமன்றத் தி. மு. க. குழுத் தலைவர் நாஞ்சில் கி. மனோகரன், நாடாளுமன்ற மேலவை தி. மு. க. குழுத் தலைவர் தில்லை வில்லாளன், நாடாளுமன்ற மேலவை முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் அப்துஸ் சமது ஆகியோரடங்கிய கூட்டுக் குழு ஒன்று உத்தரப பிரதேசம் செல்லும்!!"

என்று தி.மு.க. பொதுச்செயலாளர் நாவலர் அவர்கள் அறிவித்திருக்கிறார்.

அண்மையில் தமிழகத்தில் நிலப்பிரபுக்களாலும் -- வன்முறை அரசியல்வாதிகளாலும் தூண்டி விடப்பட்டு நடைபெற்ற விவசாயிகள் கிளர்ச்சியில் சிலர் உயிரிழந்ததையொட்டி -- இந்திரா காங்கிரசுத் தலைமை பீடம், நாடாளுமன்ற உறுப்பினர்களடங்கிய மூவர் குழுவைத் தமிழகத்திற்கு அனுப்பி வைத்தது.

அண்மையில் திருச்சிக்குச் சென்றிருந்த முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் செய்தியாளர்கள் இதுபற்றிக் கேட்டனர்.

"இப்படி அனுப்புவது பொருத்தமானதுதான் என்று அவர்கள் கருதுவார்களானால் எல்லாக் கட்சிகளும் அந்தக் காரியத்தைச் செய்யலாம்; தி. மு. கழகமும் அந்த முயற்சியில் ஈடுபடும்" என்று தெரிவித்திருந்தார்.

அன்று மாலை புதுக்கோட்டையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள்,

"அலிகார் பல்கலைக் கழகத் தகராறை எளிதில் தீர்த்திருக்கலாம்; 'அலிகார் பல்கலைக் கழகத் தகராறு பற்றிப் பொறுக்குக் குழு அமைத்து -- பிரச்சினையைப் பொறுக்குக் குழுவுக்கு விடுங்கள்' என்று நாடாளுமன்றத்தில் கேட்டார்கள்; அப்படிச் செய்திருந்தால் இன்றைக்கு உத்தரப் பிரதேசத்தில் 25 பேர் செத்திருக்கமாட்டார்கள்!

"'இதுபற்றிய நிலைமைகளைக் கண்டறிந்துவர முஸ்லிம் லீக் எம்.பி.-களை அனுப்பப் போகிறோம்; கழக எம்.பி.-க்களையும் அனுப்புங்கள்' என்று முஸ்லிம் லீக கட்சியினர் கேட்டிருக்கிறார்கள்; நானும் சம்மதித்திருக்கிறேன்; யார் யார் செல்லப் போகிறார்கள் என்பதைக் கழகப் பொதுச்செயலாளர் நாவலர் அவர்கள் விரைவில் அறிவிப்பார்" என்று தெரிவித்திருந்தார்.

கழகத் தலைவரின் அறிவிப்புக்கிணங்க, பொதுச்செயலாளர் நாவலர் அவர்கள் இதுகுறித்து அறிக்கை ஒன்று விடுத்துள்ளார்; அதன் விவரம் வருமாறு:—

"அலிகார், வாரணாசி ஆகிய பகுதிகளில் அணமையில் ஏற்பட்ட கலவரங்களைப் பற்றிய நிலைமைகளையும் அவற்றிற்கான காரணங்களையும் ஆராய்ந்து அறிக்கை வெளியிட தி. மு. கழகத்தைச் சேர்ந்த நாடாளுமனற உறுப்பினர்கள் தோழர்கள் நாஞ்சில கி. மனோகரன, தில்லை வில்லாளன், முஸ்லிம் லீக நாடாளுமனற உறுப்பினர் தோழர் அபதுஸ் சமது ஆகியோர் கூட்டுக குழுவாகச் செல்கிறார்கள்.

"இவர்கள் ஜூலைத் திங்கள் 20-ம் நாள் புறப்படவிருக்கிறார்கள்; அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து அறிந்து அறிக்கை அளிப்பார்கள்."

உள்ளூர் மக்களுக்குச் சலுகை

பெங்களூர், ஜூலை 19—
"தொழிற்சாலைகளில, உள்ளூர் மக்களுக்கே வேலை அளிக்க வேண்டும் எனச் சட்டத்தின் மூலம் நிர்ப்பந்திக்க முடியாது" என்று மைசூர் முதலமைச்சர் தேவராஜ் அர்ஸ், மேலவையில் கூறினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

'அண்ணாவின் அறவழியில் அணிவகுத்துச் செல்வோம்'

'தி. மு. கழகத்திற்குத் திமிர்வாதம் உடன்பாடன்று'

'மக்கள் மன்றத்தின் தீர்ப்பை ஏற்பதற்குத் தயங்கோம்'

கழகப் பொதுச்செயலாளர் நாவலர் தெளிவுரை

திருச்சி, ஜூலை 19—

"வன்முறைகளின் பெயரால், குறுக்கு வழியில் இந்த ஆட்சியைக் கவிழ்த்துவிடலாம் என்று சிலர் கனவு கண்டுகொண்டிருக்கிறார்கள்; பேரறிஞர் அண்ணா அவர்கள், 'எனக்கு வேட்டு முறையில் நம்பிக்கை இல்லை — வோட்டு முறையில்தான் நம்பிக்கை உண்டு' என்று குறிப்பிட்டிருக்கிறார்; வன்முறைச் செயலை அவர் என்றும் விரும்பியதே கிடையாது.

அண்ணாவின் ஒரே சொத்து, பேனா முனையும் — நாவன்மையும்தான்; இந்த இரண்டு 'வன்மை'களும் இருந்த காரணத்தினால்தான் இலட்சோபலட்சம் மக்களை தன்பால் ஈர்க்க அவரால் முடிந்தது.

அறிஞர் அண்ணா அவர்கள், நமக்கு இன்னொன்றையும் கற்றுக் கொடுத்தார் — 'கத்தியைத் தீட்டாதே — புத்தியைத் தீட்டு' என்பதுதான் அது; 'புத்தியைத் தீட்டுவதனால் நீங்கள் எண்ணியதை எண்ணியபடி நிறைவேற்ற முடியும்; ஆனால், கத்தியைத் தீட்டுவதனால் கொள்கை வளராது; அதற்கு மாறாக, ஒருவரது உயிர்தான போகும்' என்றும் சுட்டிக்காட்டினார்.

இன்றைக்குச் சிலர் போராட்டத்தைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்; ஆனால் அண்ணா அவர்கள், போராட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், 'நான் போராட்டத்தைத் தேடி அலையமாட்டேன் — தேடிவருகின்ற போராட்டத்தைக் கண்டு நடுங்கி ஓடி ஒளியமாட்டேன்' என்றார்.

இப்போது சில அரசியல் கட்சித் தலைவர்கள், தனித்தனியாக — கூட்டு கூட்டாகச் சேர்ந்துகொண்டு, 'ஏதாவது ஒரு போராட்டத்தை நடத்த வேண்டுமே — என்ன போராட்டத்தை நடத்தலாம் — எப்படி நடத்தலாம் — எங்கே நடத்தலாம் — எந்தெந்த முறையில் நடத்தலாம் — யார் யாரைச் சேர்த்துக்கொண்டு போராட்டத்தை நடத்தலாம் — இல்லையென்றால், நன்றாக இருக்காதே' என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், 'கழகத்தை அழித்தொழிப்போம் — கழக ஆட்சியைக் கவிழ்ப்போம்' என்கிறார்கள்!

ஆட்சிப் பீடத்தில் யார் எங்களைத் தூக்கிவைத்தார்களோ அவர்கள் நினைத்தால்தான எங்களைக் கீழே இறக்கலாம்; மக்கள் மன்றம் நினைத்தால், எங்களை ஆட்சிப் பொறுப்பிலிருந்து கீழே இறக்கலாம்; 'எங்களை ஆட்டவே முடியாது — அசைக்கவே முடியாது' என்று திமிர்வாதம் பேசுபவர்கள் அல்லர் நாங்கள்! 1957-ல் கழகத்திற்குப் பதினைந்தே பதினைந்து இடம்தான் கிடைத்தது; 1962ல் அது ஐம்பதாக மாறியது; அப்பொழுதுதான் நான் சட்டமன்றத்தின் உள்ளே நுழைய முடிந்தது.

அப்பொழுது காமராசர் அவர்கள், எங்களை, 'நாடகமாடிகள் — கூத்தாடிகள் — சினிமாக்காரர்கள்' என்றெல்லாம் கேலி செய்தார்; 'நாடகமாடிகளுக்கு நாடாளத் தெரியுமா' என்று கேட்டார்கள்; அறிஞர் அண்ணாவுக்கு, 'அறிஞர் என்ற பட்டம் கொடுத்தவன் எவன் — இவனுக்கு என்ன தெரியும் — அவனுக்கு என்ன தெரியும் — தி. மு. கழகத்தை நம்பலாமா — இவர்கள் எல்லாம் வெள்ளையர்களுக்குக் காட்டிக் கொடுத்தவர்களாயிற்றே' என்றெல்லாம் வசைமாரி பொழிந்தார்கள்!

அதுமட்டுமல்லாமல், மத நம்பிக்கை உள்ளவர்களிடத்தில் போய், 'இவர்கள் கடவுள் இல்லை என்று சொல்லுபவர்களாயிற்றே — இவர்களுக்கா நீங்கள் ஆதரவு அளிக்கப் போகிறீர்கள்' என்று கேட்டார்கள்; ஆனால், கடைசியில் என்ன ஆயிற்று என்பதை அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

234 சட்டமன்றத் தொகுதிகளில் நமக்கு 90 இடங்கள்தான் கிடைக்கும் என்ற முடிவுக்கு வந்தோம்; அதனால்தான், அண்ணாவை நாடாளுமன்றத்திற்கு நிற்கவைத்தோம்; அப்பொழுது நாங்கள், 'அமைச்சர்களாவோம்' என்று கனவிலும்கூட நினைக்கவில்லை!

பின்னர் நடைபெற்ற தேர்தலில், மதிப்பிற்குரிய காமராசர், தொகுதி தோறும் சென்று நம்மைப்பற்றி என்னென்னவோ பேசினார் — பழிகள் பல சுமத்தினார்; காங்கிரசின் கொள்கைகளையெல்லாம் காற்றிலே பறக்கவிட்டு முதலாளித்துவத்திற்கு முலாம் பூசினார்!

இவ்வளவுக்குப் பிறகும் இந்தக் கொள்கைக் கோமானுக்கு—முடிசூடா மன்னனுக்கு—நேருவின் வாரிசுக்கு—'நேருவின் வலது கரம்' என்று அழைக்கப்பட்டவருக்கு—ஏழைப் பங்காளருக்கு—'கல்விக் கண் தந்த கடவுள்' என்று அழைக்கப்பட்டவருக்கு—கர்மவீரருக்கு—இந்த நாட்டு மக்கள் தந்த இடம் பதினைந்தே பதினைந்துதான்; இந்த 15-ல் ஒன்று போய் ஓராண்டு ஆகிறது; பிறகு 14 ஆயிற்று; அந்தப் பதினான்கில் ஒன்றுபோய் பதிமூன்றாயிற்று; இப்படி ஒவ்வொருவராக சிண்டிகேட்டிலிருந்து விலகிக் கொண்டே இருக்கிறார்கள்!

ஏதுமற்ற எங்களுக்கு இந்த நாட்டு மக்கள், 1971-ல் 183 இடங்களைத் தந்தார்கள்.

மக்கள் மன்றம் பார்த்துத்தான் 209 இடங்களை கூட்டணிக் கட்சிகளுக்குத் தந்தது; அதே மக்கள் மன்றம்தான் எங்களைக் கவிழ்க்க வேண்டுமே தவிர, காமராசர்—கல்யாணசுந்தரம் போன்றவர்களால் அவ்வளவு எளிதில் கவிழ்த்து விட முடியாது.

செய்தித் தாள்களில் அறிக்கை விடுவதன் மூலம் எப்படி ஒரு ஆட்சியைக் கவிழ்க்க முடியுமென்று கேட்கிறேன்.

ஆட்சியைக் கவிழ்த்துவிட்ட பிறகு, கட்சியின் வலிவு — கட்சியின் ஆதரவு எங்கே போய்விடுமென்று கேட்க விரும்புகிறேன்.

எங்களை 'டிஸ்மிஸ்' செய்துவிடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம்; அப்படி ஒரு நிலைமை ஏற்படுமானால், அத்தகையச் செயலைப் பார்த்து உலகம் சிரிக்கும் என்பது எங்களுக்குத் தெரியாதா?

பக்கத்து நாடுகள் எல்லாம் இங்கு நடைபெறுகின்ற சனநாயக ஆட்சியைப் பற்றி என்ன எண்ணும் என்பது பற்றியும் எங்களுக்கு நன்கு தெரியும்.

ஆட்சியைவிட்டு எங்களை இறக்கிவிட்ட பிறகு, கட்சியின் வலிமை குன்றிவிடுமா? அண்ணா அவர்கள் ஊட்டிய உணர்ச்சி மங்கிப் போய்விடுமா?

எங்கெங்கு வலது கம்யூனிஸ்டுகள் திட்டமிட்டு திட்டமிட்டு வன்முறைச் செயல்களில் ஈடுபட்டார்களோ, அங்கெல்லாம் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிறது; கோவில்பட்டி—சாத்தூர்—விருதுநகர்—திருவில்லிபுத்தூர்—இராசபாளையம் போன்ற 5 இடங்களில் திட்டமிட்டு வன்முறைச் செயல்களில் இறங்கிய காரணத்தினால், துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிறது.

வண்டிகளை எல்லாம் சாலைகளின் நடுவே நிறுத்திவிட்டு — ஒரு சக்கரத்தை கழற்றிப் போட்டுவிட்டு — பாராங்கற்களை நடுரோட்டில் வைத்துவிட்டு — போக்குவரத்தை அடைத்துவிட்டு — பொது மக்களின் சொத்துக்களுக்கு நெருப்பு வைத்து கொளுத்தியபோதுதான் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதே தவிர, கடையை அடைக்கச் சொல்லும்பொழுதோ — ஊர்வலமாக வந்தபொழுதோ துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறவில்லை என்பதை அனைவரும் நன்கு உணர வேண்டும்.

தமிழகம் முழுவதும் மொத்த நிலப் பட்டாக்களின் எண்ணிக்கை 93 இலட்சம் இருக்கும்; இதில் 6 இலட்சம் பேர் பம்பு செட்டுக்கள் வைத்திருக்கிறார்கள். இதில் பலர் பல பம்பு செட்டுக்கள் வைத்திருக்கிறார்கள்; பட்டாகாரர் ஏழை மன்றாடியார் மட்டும் 40 பம்பு செட்டுகள் வைத்திருக்கிறார்; அவரது தம்பி 30 பம்பு செட்டுகள் வைத்திருக்கிறார்; அங்குள்ள பணக்காரர்கள் எல்லாப் பம்பு செட்டுகள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பம்பு செட்டுக்கு ஒரே ஓர் காசு மட்டும் கூடுதலாக உயர்த்தியிருக்கிறோம் — அவ்வளவுதான்; அப்படி ஒரு காசு உயர்த்துவதன் மூலம் பாதிக்கப்படுகின்றவர்களின் எண்ணிக்கை இன்றைக்கு ஏறக்குறைய 3 இலட்சம் இருக்கும் என்று கருதுகிறேன்.

கோயம்புத்தூரில் கிணறு வெட்ட வேண்டுமென்றால் இருபதாயிரம் அல்லது முப்பதாயிரம ரூபாய் தேவைப்படுகிறது; பிறகு, ஆறாயிரம் ரூபாய்ச் செலவு செய்து பம்பு செட் வைக்க வேண்டியிருக்கிறது; ஆக, முப்பதாயிரம் ரூபாய் செலவு செய்து கிணறு வெட்டுபவர்கள் எல்லாம் ஏழைகளா? 40 பம்பு செட் வைத்திருப்பவர்கள் ஏழைகளா?

மன்றாடியார் போன்ற மிட்டா மிராசுகளுக்குப் பரிந்து பேச கம்யூனிஸ்டுக் கல்யாணசுந்தரம் முன்வரலாமா? நிலப் பிரபுக்களுக்குத் துணை போவதா?

இன்றைக்கு எத்தனை ஏழை விவசாயிகள் பம்பு செட் வைத்திருக்கிறார்கள் என்று சொல்லட்டுமே—பார்க்கலாம்.

ஒரு காசு உயர்த்தியதன்மூலம் எத்தனை ஏழை விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறட்டுமே பார்க்கலாம்.

5 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் எல்லாம் ஏழைகளா?

வசதிப் படைத்தவர்கள் ஒரு காசு கூடுதலாகத் தரமுடியாதா? இதற்கொரு போராட்டம் வேண்டுமா? இதற்குத் தலைமைதாங்குவது பட்டக்காரர் மன்றாடியாரா?

விவசாயிகளுக்கு வரி போட்டோம் என்கிறார்கள்; யாருக்கு வரி போடப்பட்டிருக்கிறது — 7½ ஸ்டாண்டர்டு ஏக்கருக்குமேல் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே வருமான வரி போடப்பட்டிருக்கிறது; இது தவறு என்று சொன்னால், இந்த அநியாயத்தை யார் கேட்பது?

ஒரு காசு உயர்த்தியதற்காகப் போராடுகின்ற ஏழை மன்றாடியார், அரசுக்குச் செலுத்த வேண்டிய வருமான வரி ரூ 2,172.75 நிலுவையாக உள்ளது; இதனை வசூலிக்க வேண்டாமென்று கல்யாணசுந்தரம் விரும்புகிறாரா?

மன்றாடியார் மகன் ராஜ்குமார், அரசுக்குச் செலுத்த வேண்டிய வருமான வரி ரூ. 3,214.10; திருமதி பார்வதி அர்ச்சுனன் செலுத்த வேண்டிய வருமான வரி ரூ. 2,394 23; அவரது திருக்குமாரர் — சின்ன எசமான் — மன்னூர் சம்பந்தம் செலுத்த வேண்டிய வருமான வரி ரூ. 28,425 65 என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உயர் அழுத்தமுள்ள மின்சாரத்தைக் குறைந்த ஓட்டத்தில் விவசாயிகட்கு வழங்க அரசுக்கு யூனிட் ஒன்றுக்கு 21 காசாகிறது; இதுவரை 10 3/4 காசுக்கு விவசாயகட்குத் தந்துவந்தோம்; இப்போது அதனை 12 காசுகளாக உயர்த்தியிருக்கிறோம்; அதனால் அரசுக்கு ஏற்படும் நட்டம் யூனிட்டுக்கு 9 காசு; மொத்தத்தில் அரசுக்கு ரூ. 16 கோடி நட்டம் ஏற்படுகிறது.

இப்போது நாங்கள், 'முதல் 200 யூனிட்டுக்கு 12 காசு செலுத்தினால் போதும்' என்று ஆக்கியிருக்கிறோம்; '200 யூனிட்டுக்கு மேல் பழைய கட்டணம் செலுத்தினால் போதும்' என்றும் சொல்லியிருக்கிறோம்.

இந்தியாவிலேயே மிகக் குறைந்த செலவில் மின் கட்டணம் வசூலிக்கப்படுகின்ற மாநிலம் ஒன்று உண்டெனில் அது தமிழகம்தான் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

—வன்முறைக் கண்டனக் கூட்டத்தில்

நள்ளிரவில் நாடாளுமன்ற — சட்டமன்ற கூட்டங்கள்

புதுடில்லி, ஜூலை 18—

சுதந்தர வெள்ளி விழாவை யொட்டி நாடாளுமன்றத்தின் இரு அவைகளும், மாநிலச் சட்டமன்றங்களும் ஆகஸ்டு 14-ந் தேதி நள்ளிரவுக்குப் பிறகும் கூடி, நாட்டுப் பணிக்குத் தம்மை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்ளும்.

கான்கிரீட் இரயில் பாதை

ஒரு நாளைக்கு நான்கு பர்லாங் தூரத்திற்கு கான்கிரீட் சாலை போடக்கூடிய புதிய 'இரயில் வண்டி' ஒன்று பிரிட்டனில் தயாரிக்கப்பட்டுள்ளது; இந்தப் புதிய வண்டியைக் கொண்டு ஒரு மைல் நீளத்திற்கு கான்கிரீட் இரயில் பாதை முதலில் போடப்பட்டுள்ளது.

அதிவேக இரயில்களை வழக்கம் போல் தண்டவாளத்தில் ஓட்டுவதற்குப் பதிலாக இனி கான்கிரீட் பாதையில் ஓட்டுவதற்கு பிரிட்டனில் முதல் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இரும்புத் தண்டவாளத்திற்கும் பதிலாகக் கான்கிரீட் பாதை அமைக்கும் இந்தப் புதிய முயற்சியில் பல உலக நாடுகள் அக்கறை காட்டியுள்ளன.

இந்த கான்கிரீட் பாதை உறுதியாக — நீடித்து உழைக்கக்கூடியது என்பதுடன், இரயில் ஓடும்போது எழுகின்ற சத்தத்தையும் குறைத்துவிடக்கூடியது என்று இதனை உருவாக்கிவரும் பிரிட்டிஷ் இரயில்வேயின் ஆராய்ச்சி எஞ்சினியர்கள் கூறினர்.

அமைக்கப்பட்டுள்ள கான்கிரீட் இரயில் பாதையில் முதலில் 100-மைல் வேக இரயில்களை ஓட்ட முடிவு செய்துள்ளனர்; இன்னும் இரண்டு மாதங்களில் இந்தப் பாதை பயனுக்கு வருகிறது.

தாம்பரம் — படப்பை பஸ்

சென்னை, ஜூலை 18—

தாம்பரத்திற்கும்—படப்பைக்கும் இடையே பல்லவா போக்குவரத்துக் கழகம் ஒரு டவுன் போக்குவரத்தை (51—சி) தொடங்கியிருக்கிறது.

துணிவு இருந்தால் சனநாயக முறையில் சந்தியுங்கள்

கொல்லைப்புற வழியாகச் சதிவேலை வேண்டாம்

வன்முறைகளால் கழக ஆட்சியைக் கவிழ்க்க முனைந்தால் ஏமாறுவீர்!

இந்திரா காங்கிரசுக்கு அமைச்சர் செ. மாதவன் அறைகூவல்

மதுரை, ஜூலை 18—

'தி. மு. கழக அரசு, தலைமையமைச்சர் இந்திரா காந்தியின் சோஷலிசக் கொள்கைகளைச் செயல்படுத்திவருகிறது; இவற்றைச் செயல்படுத்துவதில் ஏதேனும் தவறு இருந்தால் எதிர்க் கட்சிகள் அதைச் சுட்டிக்காட்டட்டும்.

"மாறாக மத்திய அரசு, கிளர்ச்சிகள் மூலம் குழப்பத்தைத் தோற்றுவித்து, 'தி. மு. கழக ஆட்சியைக் கவிழ்க்கலாம்' என்று நினைத்தால், ஏமாந்துபோய்விடுவதில்தான் முடியும்.

"தி. மு. கழக ஆட்சியை மத்திய அரசு கவிழ்க்க விரும்பினால், மற்றக் கட்சிகளின் உதவியுடன் கொல்லைப்புறச் சதிகளைக் கையாளுவதைவிட, நேரடியாக சனநாயக முறையில் எங்களை ஆட்சியிலிருந்து இறக்க முயற்சி செய்து பார்க்கட்டும்"

என்று சட்டத் துறை அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் மதுரை தமுக்கம் திடலில் நடைபெற்ற வன்முறைக் கண்டனப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் அறைகூவல் விடுத்தார்; அவர் மேலும் பேசியதாவது:—

"விவசாயிகள்மீது வரி விதித்து ரூ. 17 கோடி வருமானம் திரட்டுமாறு மத்திய அரசு, மாநில அரசுக்குக் கூறியது.

தமிழ்நாட்டில் உள்ள இந்திரா காங்கிரசுக்காரர்களுக்கு விவசாயிகள் மீது அக்கறை இருந்தால், அவர்கள், மத்திய அரசுக்கு எதிராகப் போராடி இருக்க வேண்டுமே தவிர, இங்குள்ள மற்றக் கட்சிகளுடன் சேர்ந்து கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கக் கூடாது.

எங்களுடைய கொள்கையிலோ — திட்டங்களிலோ குறைபாடு இருந்தால், சனநாயக முறையில் சுட்டிக்காட்டும் — நேருக்கு நேர் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்.

ஆனால், வன்முறைகளில் நம்பிக்கை வைப்பவர்களுக்கு என்ன கதி ஏற்பட்டிருக்கிறது என்பதை சரித்திரம் வரலாறு சுட்டிக் காட்டியிருக்கிறது; அதை அவர்கள் உணர வேண்டும்.

நாலரைக் கோடி தமிழ்ச் சமுதாயம் எங்கள்மீது நம்பிக்கை வைத்து ஆட்சியை ஒப்படைத்திருக்கிறது; இந்தியத் துணைக் கண்டமே வியந்து பாராட்டும் அளவுக்கு இந்த நாட்டில் நாடாளுமன்ற அரசியலை நடத்தி வருகிறோம்.

நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்த போது, 'ஏழை விவசாய மக்களுக்கு வரிபோடாதீர்கள்' என்று சொன்னோம்; நாங்கள் பதவிக்கு வந்தவுடன், வரி நீக்கம் செய்தோம்.

ஏழை எளியவர்களுக்கு நிலங்களைச் சொந்தமாக்கவேண்டும் என்றோம்; இன்று இலட்சோபலட்சம் ஏழை விவசாயிகளுக்கு நிலங்களைச் சொந்தமாக்கியிருக்கிறோம்.

நாங்கள் செய்வதைப் பார்த்துச் சிலர் ஆத்திரப்படுகிறார்கள்; மக்களுக்கு நன்மை கிடைக்கக் கூடாது; என்று நினைக்கிறார்கள்; இதனால், 'இந்த ஆட்சியைக் கவிழ்க்க யாரோடும் சேருவோம்'; என்றுகூறி அவ்வாறே செய்து வருகின்றனர்.

தியாகராயநகரில் காமராசர் தலைமையில் சதித்திட்டம் உருவாக்கப்பட்டது எங்களுக்குத் தெரியும்; யார், யார் அவரைச் சந்தித்தும் பேசினார்கள் என்பதும் எங்களுக்குத் தெரியும்; அவர்கள் என்ன பேசினார்கள் என்பதும் எங்களுக்குத் தெரியும்.

வலது கம்யூனிஸ்டுகளில் பலபேருக்கு இந்தப் போராட்டத்தில் ஈடுபட மனம் இல்லை; ஆனால், கட்சியில் உள்ள ஒரு தனி நபர் — பலாத்காரத்தில் நம்பிக்கை உள்ள அவர் — 'கலைஞரைத் தனிப்பட்ட முறையில் தாக்கவேண்டும்' என்று நினைக்கும் அவர்தான், 'இந்தப் போராட்டத்தில் ஈடுபடவேண்டும்' என்றார்; அவரைப் பின்பற்றுபவர்கள் இதில் ஈடுபட்டார்கள்.

'இந்த ஆட்சியை மாற்றுவோம்' என்றார்கள்; சில பத்திரிகைகள் இவர்களுக்கு ஆதரவாக இருந்தன; 1971 தேர்தலில் சந்தித்தோம்; அந்தப் பாடத்தை மறந்துவிட்டு மீண்டும் முழங்குகிறார்கள்!

"தமிழ்நாட்டில் அடுத்த தேர்தல் வந்தாலும், தி. மு. கழகம் ஆட்சியில் இருந்தால் தோற்கடிக்க முடியாது; எனவே, இந்திரா ஏதாவது செய்யமாட்டாரா" என்று நினைக்கிறார்கள்!

தலைமையமைச்சரால் என்ன செய்யமுடியும் என்பதும் எங்களுக்குத் தெரியும்; என்ன செய்ய முடியாது என்பதும் எங்களுக்குத் தெரியும்; நாங்கள் எதற்கும் தயாராக இருக்கிறோம்.

எந்த விநாடியும் டில்லி எது செய்தாலும், நாலரைக்கோடி தமிழ்ச் சமுதாயத்தின் சார்பில் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்!

விவசாய சங்கத்தின் பெயரால் போராட்டம் நடத்தினார்கள்; என்ன போராட்டம் — எதற்குப் போராட்டம்? நாட்டு மக்களிடம் எடுத்துச் சொன்னார்களா?

"விவசாய சங்கத்தினரைச் சந்திக்கவில்லை" என்று—குற்றஞ்சாட்டினார்கள்; தலைவர்களே பொய் பேசுவதை இப்போதுதான் பார்க்கிறோம்!

தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைவராக இருந்த ஒருவர், மறியலில் ஈடுபட்டுக் கைதுசெய்யப்பட்டுச் சிறையில் இருந்தார்; 'அவரை விடுதலை செய்யுங்கள்' என்று காமராசர் சொல்லியனுப்பினார்; அவரோ, மறியலில் ஈடுபட்டு நீதிமன்றத்தில் தண்டனை பெற்றவர்; இருந்தபோதிலும், 'காமராசர் கூறினாரே என்பதற்காக கலைஞர் அவரை விடுதலை செய்தார்.

மற்றொரு எம்.எல்.ஏ., 'சிறையில் இருக்கும் தலைவர்களை விடுதலை செய்யுங்கள் — பேச்சுவார்த்தை நடத்தலாம்' என்று கூறினார்; மறுநாள் விடுதலை செய்யப்பட்டார்கள்; ஆனால், வெளியே வந்து, 'போராட்டம் தொடர்ந்து நடக்கும்' என்று அறிவித்தார்கள்.

பொய்ப் பிரசாரத்தின்மூலம் நாட்டு மக்களை நம்பவைத்துவிடலாம் என்று நினைக்கிறார்கள்!

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தனித்தனியாக எங்களைச் சந்திக்கும்போது ஒன்று சொல்வார்கள்; ஒன்றாகச் சேர்ந்து பேசும்போது வேறொன்று பேசுகிறார்கள்.

தலைமையமைச்சர் இந்திரா, இப்போது விவசாயச் சங்கத்தின் கோரிக்கையை ஆதரிக்கவில்லை; அணுகும் முறையை எதிர்ப்பதாகச் சொல்கிறார்.

20 ஆண்டுக் கால ஆட்சியில் எத்தனைக் கொலை — கொள்ளைகள் நடந்திருக்கின்றன? ஊர்வலம் சென்றவர்களைச் சுட்டுத் தள்ளினார்களே — மதுரையில் பட்டப் பகலில் ஊர்வலம் சென்ற மாணவர்கள் அரிவாளால் வெட்டப்பட்டார்களே? — மாணவர்களை வெட்டியவர்கள்மீது ஜாமீன் வழக்குத்தானே போட்டார்கள்?

சாலைகளை அடைத்துப் போக்குவரத்தைத் கடுத்து போவோர்—வருவோர்மீது தாக்குதல் நடத்தினால், அதைத் தடுக்க வேண்டாமா? சட்டப்படி மக்களுக்கு பாதுகாப்புத் தருவது மாநில அரசின் கடமை அல்லவா?

"என்ன செய்தாலும் நடவடிக்கை எடுக்காதே — மனிதனுக்குப் பாதுகாப்பு கொடுக்காதே' என்று மத்திய அரசு கூறுகிறதா? கலகம் — குழப்பம் உண்டாக்க வேண்டும் என்று விரும்புகிறதா?

இந்த ஆட்சியைக் கவிழ்ப்பதுதான் நோக்கம் என்றால், நேரடியாகச் சொல்லட்டும்; கொல்லைப்புறத்தில் அரசியல் சூதாட்டம் நடத்த நினைக்கவேண்டாம்; மிரட்டலுக்குப் பயந்தவர்கள் அல்லர் நாங்கள்; எதையும் சந்திக்கத் தயார்!

ஆனால், பலாத்காரத்தின்மூலம் ஆட்சியைக் கவிழ்த்துவிடலாம் என்று மட்டும் நம்பவேண்டாம்."

காமராசர்—பக்தவத்சலம் கேலிக்கூத்து

'வெட்க நாள்' கொண்டாட வேண்டியவர்கள் 'துக்க நாள்' கொண்டாடிய விசித்திரம்

'கழக ஆட்சியைக் காக்க காந்தி — அண்ணா வழியில் போராடுவேன்'— சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் முழக்கம்

சென்னை, ஜூலை 19—

"தாங்கள் ஆட்சியில் இருந்த காலத்தில் செய்த அக்கிரமங்களுக்காக 'வெட்க நாள்' கொண்டாட வேண்டிய காமராசரும்—பக்தவத்சலமும் இப்போது, தி. மு. க. ஆட்சியில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்துவிட்டதாகக் கூறி 'துக்க நாள்' கொண்டாடுகிறார்கள்! அவர்கள் கையில் படிந்துள்ள இரத்த வாடையே அவர்களுக்குப் பதில் சொல்லும்!

"குமரி முதல் இமயம்வரை காங்கிரசு ஆட்சியே இருக்க வேண்டும் என்று இந்திரா காந்தி எண்ணுகிறார்; நேருவும்—லால்பகதூர் சாஸ்திரியும்கூட இப்படித்தான் எண்ணினார்கள்; எனவேதான், கழக ஆட்சியை ஒழிக்கச் சதித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன; இதை எதிர்த்துக் காந்தி வழியில்—அண்ணா வழியில் போராடுவேன்"

என்று சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள், சென்னையில் ஜூலை 15-ல் நடந்த வன்முறைக் கண்டனப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்; அவர் பேச்சு வருமாறு:—

"1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களைத் துப்பாக்கிக் கொண்டு குருவிகளைச் சுடுவது போல் சுட்டு இரத்த ஆறாக ஓடவிட்டார்கள் காங்கிரசார்; அது, 'வன்முறை' என்று அவர்களுக்கே தெரிந்திருக்கின்ற காரணத்தினால்தான் மக்கள் முன்னால் முகம்காட்ட அவர்களுக்கு வக்கில்லை.

இப்போது நாட்டில் அவர்கள் நடத்திய வன்முறைக்காகத் துணிந்து துக்க நாள் கொண்டாடுகிறார்கள்!

வெட்க நாள் கொண்டாட வேண்டியவர்கள், துக்க நாள் கொண்டாடுகிறார்கள்!

அந்த ஊர்வலத்திலே சாட்சாத் பக்தவத்சலமும் வருகிறார்; 'தி. மு. கழக ஆட்சியிலே துப்பாக்கிச் சூடு — அதிலே 15 பேர் இறந்து விட்டார்கள்' என்று அனுதாபப்பட்டுப் பேசுகிறார்; அவர் கையை அவரே பார்க்காமல் அப்படிப் பேசியிருக்கிறார்.

வருங்காலச் சந்ததிகளான மாணவர் குலத்தைச் சுட்டுப் பொசுக்கியது அவருடைய ஆட்சியில்தான்! அவர் கையைப் பார்த்திருந்தால், அந்த இரத்தத்தின் கசிவு தெரிந்திருக்கும்!

மன்னிக்கவும் — நாளாகிவிட்ட காரணத்தால் இரத்தம் உலர்ந்து போயிருக்கும் என்றாலும், அந்த வாடை போயிருக்காது!

இத்தனைக்கும் மேலாக ஆட்சியை விட்டுப் போனபோது, எந்த நாட்டிலும் யாரும் செய்திராத முறையில் அந்தத் துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களின் பட்டியலை, 'அடுத்து ஆட்சிக்கு வருகிறவர்கள் பார்த்துவிடக்கூடாது' என்று தன் கைப்படத் தீயிட்டுவிட்டு வந்த ஒரே ஓர் உத்தமர்—இந்தப் பக்தவத்சலம்தான்!

அப்போது கேரளத்திலே சுற்றுலா நடத்திவிட்டுத் திரும்பிய காமராசரிடம் பத்திரிகையாளர்கள் சென்று, நாட்டில் நடைபெற்ற பயங்கரத் துப்பாக்கிச் சூடுபற்றிக் கேட்டபோது 'நான் ஒன்றும் சொல்லத் தயாராக இல்லை — போ' என்று சொன்னவர் காமராசர்!

திருச்செங்கோட்டிலே — குமாரபாளையத்தில் — திருப்பூரிலே — கோயமுத்தூரிலே — ஊருக்கு ஊர் நூற்றுக்கணக்கில் சூடு நடந்திருக்கிறது; அப்போது அதுபற்றி எந்தவித விசாரணையும் நடத்தாதவர்கள், இப்போது தமிழகத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடுபற்றி ஆராயத் தூதுக் குழுவை அனுப்புகிறார்களாம்!

ஆராய்கின்ற புத்தி இப்போதுதான் அவர்களுக்கு வந்திருக்கிறது; ஏனென்றால், அப்போது சுட்டது அவர்களுடைய ஆட்சி!

"நானும் — இடதுசாரி கம்யூனிஸ்டுத் தலைவர் பி. இராமமூர்த்தியும் — சா. கணேசன் அவர்களும் மத்திய அரசுக்கு அதுபற்றி அன்று தந்தி கொடுத்தோம்; ஆனால், பதில் எதுவும் வரவில்லை.

பட்டம் தாணு பிள்ளையின் ஆட்சி கேரளத்தில் நடந்து கொண்டிருந்தபோது, ஒரே கிராமத்தில் 16 பேரைச் சுட்டுக் கொன்று — அவர்கள் பிரேதத்தைக்கூட உரியவர்களிடம் ஒப்படைக்காமல் — ஊர் ஓரமாகப் பெட்ரோல் ஊற்றி எரித்த சம்பவத்தைக் கேட்டுப் பதறிப் போய் காமராசரிடம் சென்று முறையிட்டேன்; 'இது இனப் பிரச்சினை; கேரள இனத்தார் தமிழ் இனத்தைக் கொன்ற பிரச்சினை; இதுபற்றிப் பண்டித நேரு அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்; இதுபற்றி விசாரணை வைக்க வேண்டும்' என்றெல்லாம் சுட்டிக்காட்டிக் கேட்டுக் கொண்டேன்.

'நான் சொன்னால் நேரு கேட்க மாட்டார்' என்று அன்று கூறிய இந்தக் காமராசர்தான், இன்று, 'கருணாநிதிக்குத் துணிவு இருக்கிறதா' என்று கேட்கிறார்!

குமரி முதல் இமயம் வரை காங்கிரசேதான் ஆள வேண்டும் என்கின்ற எண்ணம்தான் பண்டித நேருவுக்கும் இருந்தது — லால்பகதூர் சாஸ்திரிக்கும் இருந்தது; இப்போது இந்திரா காந்திக்கும் இருக்கிறது! எல்லாச் சூழ்நிலையிலும் இந்த எண்ணம்தான் அவர்களுக்கு இருந்து வருகிறது!

'இங்கு நடைபெற்றுவரும் சனநாயக ஆட்சி கழக ஆட்சியாக இருக்கிறதே' என்பதுதான் அவர்களுக்குள்ள பொருமை!

பார்க்கப் போனால், இந்த மாநிலம் கோரும் சுயாட்சி உரிமை இல்லாமல் நம்மை அவர்கள் முன்னேற விடமாட்டார்கள்!

இந்த அரசு, தாங்கிக்கொள்ள

(3-ம் பக்கம் பார்க்க)

ஏழைகளுக்கு வீட்டுமனை

துரிதமாகக் கிடைக்க ஏற்பாடு

மாநில அரசின் வேண்டுகோளுக்கேற்ப மத்திய சட்டம் திருத்தப்படும்

புதுடில்லி, ஜூலை 19—

கிராமப் பகுதிகளில் நிலமில்லாதவர்களுக்கு வீட்டு மனைகளை வழங்குவதற்காகத் துரிதமாக நிலம் கையகப்படுத்தும் பொருட்டு நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான மத்திய சட்டம் திருத்தப்படலாம்.

சுதந்தர வெள்ளி விழா ஆண்டிற்கான சிறப்புத் திட்டமாகக் கிராம மக்களுக்கும் மனைகள் தரும் பெரும் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

கிராமப் பகுதிகளில் நிலமில்லாதவர்கள் அனைவருக்கும் மனைகளை அடுத்த ஆக. 15-க்குள் வழங்க வேண்டும் என்பது இலக்கு.

நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் இதற்காக நிலம் கையகப்படுத்த வேண்டும்; வழக்கமாக நிலம் கையகப்படுத்தும் நடைமுறையினால் காலதாமதம் ஏற்படும்.

ரித நடவடிக்கைக்காக அவசர விதியைப் பயன்படுத்தத் தற்போதுள்ள சட்டம் வகை செய்கிறது.

கிராமப் பகுதிகளில் நிலமில்லாதவர்களுக்கு மனைகளை வாங்குவதற்காகக் கையகப்படுத்தும் பொருட்டு அவசர விதியைப் பயன்படுத்துவதற்கு ஏதுவாகச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று சில மாநில அரசுகள் கூறியுள்ளதாகத் தெரிகிறது.

நிலமில்லாதவர்களுக்கு மனைகளை ஒதுக்குவது பொது நோக்குள்ள செயலா என்பதை ஆராய்வதிலிருந்து நீதிமன்றங்களைத் தடை செய்யும் நீதியில் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றும் சில மாநிலங்கள் கூறியுள்ளதாகத் தெரிகிறது.

இரு யோசனைகளையும் மத்திய அரசு அனுதாபத்துடன் ஆராய்வதாகத் தெரிகிறது; எனவே, நாடாளுமன்ற மாரிக் காலக் கூட்டத் தொடரில் சட்டத் திருத்தம் வரலாம்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

முடிகின்றவனுக்கு வரி போடுகிறது! தாங்க முடியாதவனுக்கு வரியைக் குறைக்கிறது!

அப்படித்தான் மின் கட்டணம் ஏற்றப்பட்டதும்; அதுவும் ஒரே ஓர் காசு ஏற்றப்பட்டது; அதற்குத்தான் இந்த எதிர்ப்பு!

இதைப் பார்க்கும்போது, நாம் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்; இந்த நாட்டில் மிராசுதாரர்கள் சேர்ந்துகொண்டு இன்னும் ஏழைகளை ஏமாற்றுவதற்குச் சந்தர்ப்பம் இருக்கின்றது — என்கின்ற தத்துவம்தான் இந்தக் கிளர்ச்சியில் பொதிந்துள்ள உண்மையாகும்.

நான் மேலவையில் துணைத் தலைவனாக இருப்பதால், இந்த அரசாங்கத்தைக் காப்பாற்றும் புறப்படக்கூடாதா?

'அரசிடம் சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கும் நான் அப்படிச் செய்யக்கூடாது' என்றால், அரசாங்கத்தின் பணத்தைப் பென்ஷனை வாங்கிக் கொண்டு அரசாங்கத்துக்கு எதிராகச் செயல்படுகின்றவர்களை என்ன என்பது?

அரசாங்கத்தின் பென்ஷனை வாங்கிக்கொண்டு அரசுக்கு எதிராகச் செயல்படுவதுதான் மரபு என்கிறார்களா?

அப்படியானால், புதுப்புது மரபுகள் பிறக்கும்; ஏனென்றால், நடைபெறுவது கட்சிச் சண்டையல்ல — வர்க்கச் சண்டை!

இதில், சுரண்டப்படும் மக்களைச் சுரண்டுவோரிடமிருந்து காப்பாற்ற காந்தியின் — சாத்வீக வழியில் — அண்ணாவின் அற வழியில் நின்று பாடுபடுவேன்!"

மதுரை மாநாடு

கடைகள் ஏல அறிவிப்பு

"மதுரையில் ஆகஸ்டுத் திங்கள் 4, 5, 6 ஆகிய நாட்களில் நடைபெறவிருக்கும் மதுரை மாவட்ட தி. மு. கழக ஐந்தாவது மாநாட்டில் (ரேஸ் கோர்ஸ் மைதானம்) கடை வைத்து வியாபாரம் செய்து கொள்ள உரிமை 21—7—72 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் தமுக்க மைதானத்திலுள்ள மாநாட்டு அலுவலகத்தில் ஏலம் விடப்படும்"

என்று, மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் எஸ். முத்து எம்.எல்.சி. அறிவிக்கிறார்.

'கத்தியெடுத்தவன் கத்தியாலேயே அழிவான்'

'வன்முறையால் கழக அரசைக் கவிழ்க்கக் கனவு காணாதீர்'

'அண்ணா வழியில் வளர்ந்த எங்களை அழிக்க இயலாது'

டில்லிப் பெரியவர்களுக்கு நாஞ்சில் கி. மனோகரன் அறைகூவல்

சேலம், ஜூலை 19—

"விவசாயிகள், 'தங்கள் நண்பர்கள் யார்--பகடைக் காய்களாகத் தங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் பகைவர்கள் யார்' என்பதை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

"விவசாயிகளைத் தூண்டிவிட்டுக் கழக அரசைக் கவிழ்த்துவிடலாம் என்று கனவு காண்பவர்கள் ஒருபோதும் வெற்றிபெற முடியாது"

என்று நாடாளுமன்ற தி. மு. க. குழுத்தலைவர் நாஞ்சில் கி. மனோகரன், சேலத்தில் ஜூலை 15-ல் நடந்த வன்முறைக் கண்டனப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் எச்சரிக்கை விடுத்தார்; அவர் ஆற்றிய உரை வருமாறு:—

"டில்லியிலுள்ள இந்திரா கட்சியினர் 12 அம்ச திட்டங்களைக் காட்டி--விவசாயிகளின் கிளர்ச்சியினைத் தூண்டிவிட்டு --தி. மு. கழக அரசைக் கவிழ்த்துவிடலாம் என்று நினைக்கிறார்கள்.

இந்தக் கற்பனைக் கோட்டை உச்சியில் உட்கார்ந்துள்ளவர்கள் அடித்த கொட்டத்தினால் தான், 16 பிணங்கள் விழுந்துள்ளன; இதை அவர்கள் மறக்கக்கூடாது.

இந்தியத் துணைக் கண்டத்தின் அமைதிக்கு யார் யார் பங்கம் தேடுகிறார்கள் என்பதை இக் கிளர்ச்சி மூலம் அடையாளம் கண்டுகொண்டுவிட்டோம்!

தி. மு. கழக அரசைக் கவிழ்க்கத் திட்டம் போடுகிறார்களே-- இவர்கள் கடந்த 25 ஆண்டு ஆட்சிக் காலத்தில் என்ன செய்துவிட்டார்கள்?

பார்வையற்ற ஏழைகளுக்கும் பார்வை தரத் திட்டம் தீட்டினார்களா? குடிசை மாற்று வாரியம் இவர்கள் ஆட்சியில உருவாக்கப்பட்டதா?

இப்படி எவ்வளவோ சமதர்மத் திட்டத்தை வகுத்துச் செயல்படுத்திவரும் தி. மு. கழக அரசின்மீது ஏன் இப்படி வன்முறைகள் ஏவி விடப்படுகின்றன?

சமுதாயத்திலுள்ள குறைகளை இவர்கள் களைய மறுக்கிறார்கள்!

'புண்ணைப் பட்டுத் துணியினால் மூடாதே-- அறுவைச் சிகிச்சை செய்துகொள்' என்று கூறுகிறது கழக அரசு; ஆனால் மத்திய அரசோ, 'புண்ணைப் பட்டுத் துணியினால் மூடிவை -- நாற்றமடித்தால் வாசனைத் திரவியங்களைத் தெளித்துக்கொள்' என்று கூறுகிறது.

"மின்சாரக் கட்டணக் குறைப்புப் போராட்டம் பிரச்சினையன்று; தமிழக அரசு அணுகியிருக்கும் முறைதான் பிரச்சினையாகும்" என்று தலைமை அமைச்சர் கூறியிருக்கிறார்.

இந்திரா காங்கிரசுக் கட்சியின் செயற்குழுவில் விவசாயிகள் பிரச்சினை குறித்து ஆராய ஒரு பார்வையாளர் குழுவை அனுப்ப முடிவு செய்யப்பட்டபோது, தலைமை அமைச்சர் அணுகிய முறை முற்றிலும் தவறானதாகும்; அங்கு அது பற்றிய முடிவு உருவாகிய போது அவர், 'முதலில் கழக அரசின் முதலமைச்சரிடம் கருத்துக்களைத் தெரிவித்த பிறகு அதுபற்றி முடிவு செய்யலாம்' என்று கூறியிருக்க வேண்டும்; ஆனால், இந்தப் பார்வையாளர் குழுவிற்கு அனுமதி வழங்கிவிட்டு--முதலமைச்சருடன் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு பேசியிருக்கிறார்!

'குற்றம் செய்துவிட்டாய்' என்று கூறிவிட்டு -- பிறகு நீதி விசாரணை நடத்துவதுபோல இருக்கிறதல்லவா இது?

அரசியல்ரீதியாக விவசாயிகள் ஒரு மாநில அரசுக்கு எதிராகத் தூண்டி விடப்பட்டிருக்கிறார்கள் -- மாணவர்கள் தூண்டப்படுகிறார்கள்; இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு இந்திரா காந்தி மௌனம் சாதிப்பதன் மர்மம் என்ன?

சனநாயகத்தை ஒளிமயமாக்கிய பெருமை தமிழக அரசினையே சாரும்; இத்தகைய அரசினைக் கவிழ்க்கச் சதி செய்கிறார்கள்!

வன்முறையாளர்களின் தாக்குதலுக்கு உட்பட்டு வளர்ந்தவர்கள் நாம்!

'என்னைப் பின்பற்றுபவர்கள் அடிவாங்கவும் தயாராக இருக்க வேண்டும்' என்று அண்ணா அவர்கள் கட்டளையிட்டார்கள்; அந்த அன்புக் கட்டளையை ஏற்றுப் பல்லாயிரம் தம்பிகள் அணிவகுத்தனர்!

நம்மைப் பற்றி எல்லாம் எவ்வளவோ ஏசினார்கள்; நம் தோழர்களின் குடும்பத்தினரைத் திட்டவில்லையா? என் குடும்பத்தை அறுவைச் சிகிச்சை செய்யவில்லையா? கலைஞர் குடும்பத்தை அவர்கள் பந்தாடவில்லையா -- அவர்களின் குடும்பத்தைப் பற்றிக் குறைத்துக் கூறவில்லையா? இவற்றையெல்லாம் பொறுமையுடன் கேட்டு வளர்ந்திருக்கிறோம்!

எனவே, கழகத் தோழர்களுக்கு நான் ஒன்று கூறிக்கொள்வேன் -- 'வன்முறைகளைத் தூண்டினாலும் அதற்கு அடிபணிந்துவிடாதீர்கள்; பொறுமையாகச் சகித்துக்கொள்ளுங்கள்' என்று!

இந்திரா காங்கிரசுக்கு ஒன்று கூறிக்கொள்வேன் -- 'நாணயமாக அரசியல் நடத்துங்கள்; குறுக்கு வழியில் செல்லாதீர்கள்; கத்தியைத் தூக்கியவன் கத்தியினாலேயே அழிவான்' என்று!

விவசாயத் தோழர்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும் -- தங்களது தலைவர்கள் யார் என்பதை அவர்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்!

ஏழை விவசாயிகளை முன்னே நிறுத்தி வைத்துவிட்டுப் பின்னால் நிற்பவர்கள் அல்லர்-கழகத் தலைவர்கள்!

கழக அரசுதான் விவசாயிகளுக்கு நிலப் பட்டா வழங்கியிருக்கிறது-கடன் நிவாரணம் அளித்திருக்கிறது; எனவே உங்களது நண்பர்கள் யார் என்பதை புரிந்துகொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் ஆட்டக் காய்களாகப் பயன்பட்டிருக்கிறார்கள்!

கொள்கை ரீதியில் மோத முடியாதவர்கள் செல்லரித்துப் போன பிரச்சினைகளை வைத்து வன்முறைகளைக் கிளப்பிவிட்டிருக்கிறார்கள்!

இறந்துபோன இருவரின் உடலைப் புதைக்காமல் வீதி வீதியாகத் தூக்கிச் சென்று-இவர்களைப் பெற்ற வயிறு பற்றி எரியும் முறையில், 'வெற்றி-வெற்றி' என்று கூத்தடித்துக் கொண்டிருக்கிறார்கள்!

அவர்கள் நோக்கம் எல்லாம், 'பிணங்கள் விழ வேண்டும்—கலைஞரை, கோட்டையை விட்டுப் போ என்று கூறவேண்டும்' என்பதுதான்!

தமிழகத்தில் ஆட்சி சரியாக நடக்கவில்லை என்று கூறி, குடியரசுத் தலைவர் மூலம் கழக அரசை 'டிஸ்மிஸ்' செய்ய வேண்டும் என்பதுதான் அவர்கள் கற்பனை!

இந்த முட்டாள்தனமான கற்பனையில், 'மார்—அட்—லா'-க்கள் எல்லாம் ஈடுபட்டிருப்பதுதான் விந்தையானது!"

தமிழகத்தைப் பின்பற்றி மைசூர்

குடிசை மாற்று வாரியம் அமைக்கத் திட்டம்

பெங்களூர், ஜூலை 19—

தமிழ்நாட்டைப் பின்பற்றி கருநாடக மாநிலத்திலும் குடிசை மாற்று வாரியம் அமைக்க அம்மாநில அரசு முன்வந்துள்ளது.

இதற்காக ரூ. 1 25 கோடிக்கான திட்டம் ஒன்றை மாநில அரசு வகுத்து மத்திய அரசுக்கு அனுப்பியிருப்பதாகவும், இத் திட்டத்திற்கு மத்திய அரசு ரூ. 1½ கோடி ஒதுக்கியுள்ளதாகவும் கருநாடக மாநில உள்ளாட்சித்துறை அமைச்சர் பசவலிங்கப்பா தெரிவித்தார்.

சட்டமன்றக் கேள்வி நேரத்தின்போது எழுப்பப்பட்ட வினா ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

கள்ளக்குறிச்சி வட்டக் கிளைக் கழகங்களுக்கு:

தலைமைக் கழக அறிக்கைக்கேற்ப, கள்ளக்குறிச்சி வட்டத் தி. மு. க. சார்பில் 15—7—72 அன்று கள்ளக்குறிச்சியில் வன்முறைக் கண்டன ஊர்வலமும்—பொதுக்கூட்டமும் நடத்தப்பெற்றன.

முன்னணித் தோழர்களின் யோசனைக்கேற்ப, கீழ்க்காணுமாறு ஆங்காங்கு வன்முறைக் கண்டன ஊர்வலமும்--பொதுக்கூட்டமும் நடத்த 15—7—72 கூட்டத்தில் முடிவு செய்து அறிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட கிளைக் கழகச் செயலாளர்கள், பொதுக்கூட்டங்கள் நடத்த ஆவனசெய்யுமாறு வட்ட தி. மு. க. செயலாளர் கொ. மாரியப்பன் கேட்டுக் கொள்கிறார்.

கலந்துகொள்ளும் பேச்சாளர்கள்:—க. வேங்கடபதி, கொ. மாரியப்பன், டி. கேசவலு எம்.எல்.ஏ., என். நாச்சியப்பன் எம்.எல்.ஏ., என். தர்மலிங்கம் எம்.எல்.ஏ., எஸ். பி. பச்சையப்பன், பொன். இராமகிருட்டினன், க. பெ. நெடுமாறன், மு. முத்தையன்.

கூட்ட நாள் விவரங்கள்:—

ஜூலை	20:	சின்னசேலம்
	21:	வடக்கநந்தல்
	22:	தியாகதுருகம்
	23:	அரியலூர்
	24:	ரிஷிவந்தியம்
	25:	அரசம்பட்டு
	26:	நைனார்பாளையம்

பூட்டோ சட்டமன்றப் பேச்சு

இராவல்பிண்டி, ஜூலை 19—

பாகிஸ்தான் தேசிய நாடாளுமன்றத்தில் சிம்லா ஒப்பந்தம் பற்றி பூட்டோ 3 மணி 40 நிமிடம் பேசினார்; அது 100 பக்கங்கள் உள்ளது; அதைப் பாகிஸ்தான் பத்திரிகைகள் பகுதி பகுதியாக வெளியிட்டு வருகின்றன; அது இன்னும் முடியவில்லை.

ஏழைக்கு வாழ்வளிப்பது கழக ஆட்சி

குழப்பம் விளைவித்து அதனை கவிழ்க்க இயலாது

எதிரிகளுக்குப் பேராசிரியர் க. அன்பழகன் எச்சரிக்கை

கடலூர், ஜூலை 19

"தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்து சனநாயகத்தைக் காப்பாற்றி வருகிறது; தமிழ் மொழியைக் காப்பாற்றி வருகிறது; தமிழ் மக்களைக் காப்பாற்றி வருகிறது, தமிழகத்தைக் காப்பாற்றி வருகிறது!

"சாதாரணமானவர்கள் இன்று ஆட்சியில் இருப்பதால்தான் ஏழை எளிய மக்களுக்கு நன்மைகள் பல கிடைத்து வருகின்றன; அதனால்தான், தொடர்ந்து மக்கள் கழக அரசை ஆதரித்து வருகிறார்கள்.

"அப்படிப்பட்ட அரசை, குழப்பம் விளைவித்து வன்முறைகளால் வீழ்த்தி விடலாம் என்று யாரும் நினைக்க வேண்டாம்"

என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், ஜூலை 16-ல் கடலூரில் நடந்த கண்டனக் கூட்டத்தில் உரையாற்றுகையில் எச்சரித்தார்; அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"விவசாயிகள் போராட்டம் -- என்ற பெயரால் சில அரசியல் கட்சிகள் நடத்திய போராட்டத்தில் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன; இந்தப் போராட்டத்தில், இந்திரா காங்கிரசு -- பழைய காங்கிரசு -- வலது கம்யூனிஸ்டுக் கட்சி ஆகியவைகள் கலந்துகொண்டன.

அவர்களுக்குள் கொள்கையளவில் எந்தவிதமான உடன்பாடும் கிடையாது; இருப்பினும், போராட்டத்திற்காக ஒன்று கூடியுள்ளார்கள்; 'வன்முறைச் சம்பவங்களின் மூலமாவது கழக அரசைக் கவிழ்த்துவிடலாம்' என்று நினைக்கிறார்கள்; அது அவர்களால் நடவாத காரியம்.

மின் கட்டண உயர்வை எதிர்த்துப் போராட்டம் நடத்துவதில் இந்திரா காந்திக்கு உடன்பாடு இல்லை; அதே சமயம், வலது கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த புதுவை சுப்பையாவுக்கும் -- மணலி கந்தசாமிக்கும் உடன்பாடு இல்லை.

இந்திரா காங்கிரசு ஆளும் மத்திய அரசு, பம்பு செட்டுகள் -- மண்ணெண்ணெய் மற்றும் பயிர் பாதுகாப்பு ஆகியவைகள் மீது வரி விதித்துள்ளது; இதனை எதிர்க்க இந்திரா காங்கிரசாருக்கு முடியவில்லை.

விவசாயிகளுக்கு உண்மையிலேயே நன்மை செய்யவேண்டுமென நினைப்பவர்கள், உண்மையிலேயே அதிகமாக மின் கட்டணம் வசூலிக்கும் நாட்டில் அல்லவா போராட்டம் நடத்தவேண்டும்? அதை விட்டு விட்டு குறைந்த கட்டணம் வசூலிக்கும் தமிழ்நாட்டில் ஏன் போராட்டம் நடத்தவேண்டும்?

ஐந்தாம் தேதியன்று 'பந்த்' என்ற பெயரால் வன்முறைச் சம்பவங்களுக்குத் திட்டமிட்டுச் செயல்பட்டனர்; வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்ற இடங்களைப் பார்த்தால், அங்கு வலது கம்யூனிஸ்டுகளின் பங்கு அதிகம் உள்ள இடம் என்பது நன்கு புரியும்.

பெத்நாயக்கன் பாளையத்தில் 'பந்த்' அன்று போக்குவரத்தினைத் தடுக்க முயன்ற வன்முறையாளர்கள், அமைதி ஏற்படுத்த வந்த போலீசாரை ஆயிரக் கணக்கில் சூழ்ந்துகொண்டு தாக்கினார்கள்; தற்காப்புக்காகப் போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தவேண்டிய சூழ்நிலை தவிர்க்க முடியாததாகி விட்டது.

பலாத்காரத்தினால் ஆட்சியை மாற்றமுடியும் என நினைத்தால் அது முடியாது; அப்படியே ஆட்சி மாறினால், அது சர்வாதிகாரப் போக்கில் முடியும்.

பொதுவுடைமையின் தத்துவம் என்ன? பசியோடு -- நிம்மதியற்ற சூழ்நிலை இருக்கும்போதுதான் புரட்சித் தத்துவம் மலரும்; ஆனால் அப்படி எதுவும் நடைபெறவில்லை; அதனாலதான் வன்முறையில் இறங்கியுள்ளனர்.

'வன்முறையாளர்களை எதிர்க்க வன்முறையைக் கையாளவது கூடாது' என்பது அண்ணாவின் கொள்கையாகும்.

உள்ளூர் மக்களுக்குச் சலுகை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"உள்ளூர் மக்களுக்குச் சலுகை காட்டுமாறு அரசுத் தொழிற்சாலை நிர்வாகிகளுக்கு எடுத்துச் சொல்லலாம்; ஆனால் கட்டாயப்படுத்த முடியாது" என்றும் அவர் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அறிவகம் அச்சகத்தில் (24, [illegible] செங்குட்டுவன் தெரு, சென்னை 16) அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.